மின்னிதழ் E-paper
ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
03.07.2020 சனிக்கிழமை

## இந்தியப் பிரஜையை உடன் தனிமைப்படுத்த உத்தரவு!

யாழ்ப்பாணம், ஜூலை 04

இந்திய பிரஜை ஒருவர் தெப்பம் ஒன்றில் நெடுந்தீவுப் பகுதி கரையை வந்தடைந்துள்ளார். இவர், நேற்று முன் தினம் மதியம் 12 மணியளவில் நெடுந்தீவின் தென்பகுதிக் கடற்கரையை வந்தடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா அச்ச சூழ்நிலை நிலவிவரும் நிலையில் அந்த இந்தியப் பிரஜை இவ்வாறு வந்துள்ளமை பரபரப்பை

02

# கோட்டாபயவும் மஹிந்தவும் மன்னிப்புக் கோர வேண்டும்

## மனோ கணேசன் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 04

“இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு ஏற்படுத்திய அவமானம் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் மன்னிப்புக் கோர வேண்டும்.”

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

02



## யாழ். வாசி பிரான்ஸில் கொரோனாவுக்கு பலி!



யாழ்ப்பாணம், ஜூலை 04

கொரோனா தொற்றுக்கு இலக்காகி, பிரான்ஸில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மல்லாகத்தைச் சேர்ந்த பாலச்சந்திரன் அஜந்தன் (வயது-40) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொரோனா தொற்றுக்கு இலக்கான நிலையில் சுமார் 1 மாதமாக

02

## வீட்டுக்குள் நுழைந்த நாயை சுட்டுக்கொன்ற கிராம சேவகர்

### வவுனியாவில் அதிர்ச்சிச் சம்பவம்

வவுனியா, ஜூலை 04

வவுனியா செட்டிகுளம் பகுதியிலுள்ள கிராம அலுவலகர் ஒருவர் தனது வீட்டுக்குள் புகுந்த பக்கத்து

02

## ரணிலிடம் சி.ஐ.டியினர் 4 மணி நேர விசாரணை!

கொழும்பு, ஜூலை 04

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் சுமார் 04 மணித்தியாலங்கள் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

02

## கனரக வாகனத்தில் சிக்குண்டு சிறுவன் பலி!

அம்பாறை, ஜூலை 04

கனரக வாகனம் ஒன்றில் சிக்குண்டு சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் ஒன்று அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவில் உள்ள சேனைக்குடியிருப்பு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்று மாலை கல்முனை சேனைக்குடியிருப்பு கிட்டங்கி தற்காலிக பாலத்தின் திருத்த வேலைக்காக மணல் அகழ்வில் ஈடுபட்டுக்கொண்டிருந்த கனரக வாகனம் ஒன்றில் சிக்குண்டே இந்தச் சிறுவன் பலியாகியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வவுனியா டிப்போவில் 400 லீற்றர் டீசல் திருட்டு

### புலனாய்வுத் துறையினர் விசாரணை

வவுனியா, ஜூலை 04

வவுனியா இலங்கை போக்குவரத்துச் சாலையில் 400 லீற்றர் டீசல் திருட்டுச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளதையடுத்து பொலிஸ் நிலையத்தில் சாலை முகாமையாளரினால் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதையடுத்து பொலிஸாரும் புலனாய்வுத் துறையினரும் இணைந்து விசாரணைகளை

02

## கண்ணிவெடி அகற்றும்போது இயக்கச்சியில் வெடிவிபத்து!

### மூன்று பிள்ளைகளின் தாய் காயம்

கிளிநொச்சி, ஜூலை 04

கிளிநொச்சி - இயக்கச்சி, நித்தியவெட்டைப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டபோது ஏற்பட்ட

02



## மஹிந்தானந்தவின் குற்றச்சாட்டு நேற்றுடன் பொய்யாகிப்போனது!



யாழ்ப்பாணம், ஜூலை 04

2011 உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் ஆட்ட நிர்ணயச் சதி இடம்பெற்றதாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பாக, விளையாட்டுத்துறை அமைச்சின் விசேட பொலிஸ் விசாரணைப்

02

## பெண்ணை பலாத்காரம் செய்த தெற்குக் கட்சியின் வேட்பாளர்?

### சாவகச்சேரியில் நேற்று சம்பவம்



யாழ்ப்பாணம், ஜூலை 04

பிரபல தென்னிலங்கைக் கட்சி ஒன்றின் யாழ். மாவட்ட வேட்பாளர் ஒருவர் தன்னைப் பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றார் என இளம் பெண் ஒருவரால்

02

## கொரோனா நிலவர அறிக்கை

| தொற்றாளர் | புதிய தொற்றாளர் | சிகிச்சை பெறுவோர் | சந்தேகநபர்கள் | குணமடைந்தோர் |
|---|---|---|---|---|
| 2,069 | 03 | 195 | 57 | 1,863 |

இறப்பு 11

மூலம் : சுகாதார மேம்பாட்டு பணியகம்

### இந்தியப்...

ஏற்படுத்தியது.

நெடுந்தீவில் வைத்து கைது செய்யப்பட்ட அவர் நேற்று ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.

இதையடுத்து அவரை விடத்தல்பளையில் உள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில் தடுத்து வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.

### யாழ். வாசி...

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தனிமைப்படுத்தல் விதிகளின் கீழ், சடலத்தின் இறுதி நிகழ்வுகள் நடந்தன.

### கண்ணிவெடி...

வெடிப்புச் சம்பவத்தில் பெண் ஒருவர் காயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று காலை நடந்த இந்தச் சம்பவத்தில், இரத்தினபுரத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாய் காயமடைந்துள்ளார்.

நேற்று காலை 8.45 மணியளவில் இயக்கச்சி நித்தியவெட்டைப் பகுதியில் ஹலோட்ரஸ்ட் நிறுவனத்தின் பணியாளர்கள் மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது எதிர்பாரதவிதமாக இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

### பெண்ணை...

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று அந்த தெற்குக் கட்சியின் சாவகச்சேரியில் உள்ள தேர்தல் அலுவலகத்தில் இருந்து இளம் பெண் ஒருவர் கூச்சல் இட்டவாறு வெளியே ஓடிவந்துள்ளார்.

அவரைச் சூழ்ந்த மக்களும் அந்தப் பகுதியில் இருந்த இராணுவத்தினரும் சம்பவம் தொடர்பில் கேட்டபோது,

அந்தக் கட்சியின் வேட்பாளர் தன்னை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றார் என பெண் தெரிவித்திருக்கிறார்.

வேலைக்கு ஆட்கள் தேவை என்று விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய தனது தாயார் நேற்றே தன்னை அங்கு கொண்டுவந்து விட்டார் எனவும் அந்தப் பெண் கண்ணீர் மல்கத் தெரிவித்தார்.

சம்பவத்தை அடுத்து அவர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளார்.

### மஹிந்தானந்தாவின்...

பிரிவில் நடைபெற்று வந்த விசாரணைகள் நிறுத்தப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் ஆட்ட நிர்ணயச் சதி இடம்பெற்றமைக்கான போதுமான ஆதாரங்கள் இல்லை என்பதனால் விசாரணைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்தக் குற்றச்சாட்டு பொய்யானதொன்று எனக் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் இந்தப் பிரிவில் முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, முன்னாள் தெரிவுக்குழு தலைவர் அரவிந்த டி சில்வா மற்றும் குமார் சங்கக்கார, உபுல் தரங்க ஆகியோர் ஆஜராகி வாக்குமூலம் வழங்கியிருந்தனர்.

இந்நிலையில் மேற்கொண்டு அந்த விசாரணை தொடரப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

### கோட்டாபயவும்...

வெள்ளவத்தையில் அமைந்துள்ள ஐ.டி.எம். நேசன்ஸ் கம்பஸ் நிறுவனத்தின் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு சௌபாக்கியத்துக்கான அரசு என்பதைவிட குழப்பகரமான அரசாக மாறியுள்ளது. எம்.சி.சி. ஒப்பந்தம் தொடர்பான குழப்பம், கருணா அம்மான் உரை தொடர்பான குழப்பம், நாட்டுக்குப் பெருமை சேர்த்துள்ள கிரிக்கெட் வீரர்களை அவமானப்படுத்திய குழப்பம் என்று குழப்பகரமான அரசாக தற்போதைய அரசு மாறியுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர்களான குமார் சங்கக்காரவும், மஹேல ஜயவர்தனவும் எமது கட்சி உறுப்பினர்கள் கிடையாது. அவர்கள் எமது தேசத்துக்கான அபிமானத்தை ஏற்படுத்திக் கொடுத்தவர்கள்.

நாடாளுமன்றத்தில் மிளகாய்த்தூளை எறிந்தும், பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸாரைத் தாக்கியும் அரசியல்வாதிகள் நாட்டுக்கு அவமானத்தை ஏற்படுத்தியபோது இந்தக் கிரிக்கெட் வீரர்களே எமது நாட்டுக்கு அபிமானத்தை ஏற்படுத்திக் கொடுத்தவர்கள்.

நாங்கள் எதிர்பார்க்கும் தேசிய ஐக்கியத்தையும் இந்த விளையாட்டு வீரர்கள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர். இவர்களை அவமானப்படுத்தும் அளவுக்குக் கீழ்த்தரமான செயற்பாடுகளில் அரசியல்வாதிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆளுந்தரப்பினரின் இந்தக் கீழ்த்தரமான செயற்பாட்டை மறைக்க முடியாது. இது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் கிரிக்கெட் வீரர்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும்.

ஆளும் தரப்பு உறுப்பினரான முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரினால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கு அரசே பொறுப்புக் கூறவேண்டும். இந்தநிலையில் இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு ஏற்பட்டுள்ள அவமானத்தை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவைக் கொண்டு ருவிட்டரில் கருத்துத் தெரிவித்து வருவதால் மறைக்க முடியாது. அதனால் நாமலே இந்த விவகாரம் தொடர்பில் நீங்கள் ருவிட்டரில் கருத்துத் தெரிவிப்பதை நிறுத்திக்கொள்ளுங்கள் - என்றார்.

### வீட்டுக்குள்...

வீட்டு உறவினரின் வளர்ப்பு நாய் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொண்டபோது சம்பவ இடத்தில் நாய் துடிதுடித்து உயிரிழந்துவிட்ட்டுள்ளது.

இது குறித்து வளர்ப்பு நாயின் உரிமையாளர் செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை மேற்கொண்டுள்ளார்.

நேற்று பிற்பகல் வவுனியா செட்டிகுளம் கங்கன்குளம் 2 ஆம் பாம் வீதியிலுள்ள கிராம அலுவலரின் வீட்டுக்குள் புகுந்த பக்கத்து வீட்டு உறவினரின் நாய் மீது குறி வைத்து குரங்குகள் சுடும் துப்பாக்கியைப் பயன்படுத்தி சூடு மேற்கொண்டார் எனவும், இதனால் நாய் சம்பவ இடத்தில் துடிதுடித்து உயிரிழந்துவிட்டதாகவும் வளர்ப்பு நாயின் உரிமையாளர் செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டில் கூறியுள்ளார்.

இவ்விடம் குறித்து செட்டிகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# விஜயதாஸ மீது சட்ட நடவடிக்கை

## ராஜித அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 04

அவன்காட் விவகாரத்தில் தன்மீது பொய்யான குற்றச்சாட்டு முன்வைத்துள்ள பொதுஜன பெரமுன வேட்பாளர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வேன் என முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அவன்காட் நிறுவனத்தினர், 3 வருடங்களுக்கு முன்பு 5 மில்லியன் கொடுத்ததாக கூறினார்கள். நேற்று முன் தினம் இரவு முதல் 2 கோடியாக அந்தத் தொகை மாற்றம் அடைந்து காணப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் அவன்காட் நிறுவதற்கு எதிராகச் சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானித்துள்ளேன்.

அதாவது யாருக்கு வேண்டுமென்றாலும் முடியும் தங்களது விருப்பத்துக்கு ஏற்றவாறு காசோலை புத்தகத்தை கொண்டுவந்து, அதில் தொகையொன்றை எழுதி வழங்க முடியும். அதனை பெற்றுக்கொண்டவர் ஒப்புக்கொள்ள வேண்டும்.



இதற்கு முன்னர் அவன்காட் நிறுவனத்தின் உரிமையாளர் 50 கோடி ரூபா தங்களுக்காக செலவிட்டதாக கூறியுள்ளார். அவ்வாறாயின் நேற்று இரவு மிகுதி 50 கோடி ரூபாயை விஜயதாஸ ராஜபக்ஷ பெற்றிருப்பாராக இருக்கும்.

இப்போது என்ன சொல்கிறார். அவருக்கு இவ்வளவு கொடுத்தேன், இவருக்கு இவ்வளவு கொடுத்தேன், என்கிறார். குறித்த நிறுவனம் வியாபாரத்தில் ஈடுபடவில்லை. மோசடி செயற்பாடுகளில்தான் இதுவரை காலமும் ஈடுபட்டு வந்துள்ளது-என்றார்.

# பஸ் மோதி ஓட்டோவில் பயணித்தவர் படுகாயம்!

உரும்பிராய் பகுதியில் நேற்று பிற்பகல், இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் ஒன்றும், ஓட்டோ ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

பலாலி வீதியில், உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் ஓட்டோவில் பயணம் செய்தவர், படுகாயமடைந்துள்ளார். அவர், உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

### வவுனியா...

முன்னெடுத்து வருவதாக சாலை முகாமையாளர் ஷாகீர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

கடந்த கொரோனா தொற்று ஏற்பட்ட காலப்பகுதியில் நாடாளாவிய ரீதியாக மக்களின் இயல்பு வாழ்க்கை முடக்கப்பட்டு நாட்டில் ஊரடங்குச்சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தது. இக் காலப்பகுதியில் பஸ்களுக்கு டீசல் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதையடுத்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப் பட்டுள்ளதுடன் பொலிஸார் புலனாய்வுத் துறையினருடன் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்திருந்தார்.

கடந்த இரண்டு தினங்களாக இ.போ.ச பஸ்களின் உள்ளூர் சேவைகள் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருதாகவும் வேலைக்குச் செல்லும் இளைஞர்கள், யுவதிகள் இதனால் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து சாலை முகாமையாளர் தெரிவிக்கையில்,

நிதி மோசடியில் ஈடுபட்ட நடத்துநர்கள், சாரதிகள் சிலர் சேவையிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர். அவர்களின் சேவைகளுக்கும் இடைவெளி ஏற்பட்டுள்ளதுடன் அவர்கள் மீது விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற திருமண நிகழ்வு ஒன்றுக்குச் செல்வதற்கு பல சாரதிகள், நடத்துநர்கள் விடுமுறை பெற்று சென்ற காரணத்தினால் உள்ளூர் பஸ் சேவைகளை மேற்கொள்ள முடியவில்லை-என்றார்.

### ரணிலிடம்...

கொள்ளுப்பிட்டியில் உள்ள அவரது வீட்டுக்கு நேற்று பிற்பகல் சென்ற சி.ஐ.டி குழுவினர், பிணை முறி மோசடி தொடர்பில் வாக்குமூலம் பெற்றுள்ளனர். சுமார் நான்கு மணித்தியாலங்கள் வாக்குமூலம் பெற்றபின்னர் அவர்கள் அங்கிருந்து சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

Eelanadu
04.07.2020 சனிக்கிழமை

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 492 7805

# மாவீரர் குடும்பங்களின் ஆதரவு யாருக்கு?

பேராளிகள் மற்றும் மாவீரர் குடும்பங்கள் எம்.ஏ.சுமந்திரனுக்கு வாக்களிக்க வேண்டாமென்று, விடுதலைப் புலிகள் அமைப்பின் மூத்த உறுப்பினர் பசீர் காக்கா எனப்படும் மனோகர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். தமிழ் மக்கள் தேசியத்தோடு நிற்கும் கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார். ஆனால் சில தினங்களுக்கு முன்னர் ஜனநாயக போராளிகள் என்று அறியப்படும் முன்னாள் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் அமைப்பு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம்முறை 20 ஆசனங்களை பெறுவதற்கு தாம் பாடுபடப் போவதாக அறிவித்திருந்தது. போராளிகள், மாவீரர் குடும்பங்களிலும் இரண்டு அணிகள் இருக்கின்றனவா? இதுவரை மாவீரர் குடும்பங்களில் மட்டும் தான் பிளவு இருந்திருக்கவில்லை.

விடுதலைப் புலிகள் அமைப்பு தோல்வியுற்றதைத் தொடர்ந்து, அந்த அமைப்பின் சரணடைந்த போராளிகள் சிலர், ஆங்காங்கே அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினர். சிலர் தங்களை ஓர் அரசியல் குழுவாக அடையாளம் காட்ட முற்பட்டனர். சிலர் கூட்டமைப்பிற்கு ஆதரவாக செயற்பட்டனர். சிலர் கூட்டமைப்புடன் இணைந்து பயணிக்கவும் முற்பட்டனர். ஆனால், சம்பந்தன் தலைமை அதற்கு ஆதரவாக இருக்கவில்லை. மாவை அதற்கு ஆதரவாக இருந்தபோதிலும் கூட, சம்பந்தன் அதற்கு பச்சைக்கொடி காட்டவில்லை. திருகோணமலையில் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில், முதன்மை வேட்பாளராக போட்டியிடும் ரூபன், 2015 நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கு தனக்கு சந்தர்ப்பம் தருமாறு சம்பந்தனிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். ஆனால் சம்பந்தன் அதனை நிராகரித்துவிட்டார். அவருக்கு ஒரு சந்தர்ப்பத்தை கொடுங்கள் என்று பலர் கூறியபோதிலும் அதற்கு சம்பந்தன் இணங்கவில்லை.

விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்கு பின்னர் ஜனநாயக ரீதியில் அவர்களால் இன்று வரையில் எழுச்சியுற முடியவில்லை. விடுதலைப் புலிகள் அமைப்பின், நன்கு அறியப்பட்ட உயர்மட்டத் தலைவர்கள் எவரும் உயிரோடு இல்லாமல் இருப்பதும் இதற்கொரு காரணம் எனலாம். கே.பி. ஒருவர்தான் இருக்கின்றார் ஆனால் அவரும் வெளிநாடுகளில் செயற்பட்ட ஒருவர். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் சிலர் தங்களை முன்னாள் போராளிகளாக அடையாளப்படுத்தி, அரசியலில் பயணம் செய்ய முற்பட்டனர். ஆனால் அது மக்கள் மத்தியில் பெரியளவில் வரவேற்பைப் பெறவில்லை. இந்த நிலையில், கூட்டமைப்பை ஆதரிப்பதன் ஊடாக தங்களுக்கான வாய்ப்புக்களை பெறலாமென்று? இப்போதும் சில புலிப் போராளிகள் முயற்சிக்கின்றனர். அவ்வாறானவர்கள் சுமந்திரனின் கருத்துக்கள் தொடர்பில் அலட்டிக்கொள்ளவில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் தாங்கள் ஒரு சிலர் ஒதுங்கிக்கொள்வதற்கு ஒரு வசதியான கூடாரத்தை தேடுகின்றனர். தேர்தல் காலங்களில் போராளிகள், மாவீரர் குடும்பங்கள் தொடர்பில் பேசும் எத்தனை கட்சிகள், உண்மையிலேயே அவர்களது நல்வாழ்விற்காக பாடுபட்டிருக்கின்றன?

# ஜிந்துப்பிட்டியை சேர்ந்த 154 பேர் தனிமைப்படுத்தலுக்கு அனுமதிப்பு

கொழும்பு, ஜூலை 04

கொழும்பு - 13 ஜிந்துப்பிட்டியில் கொரோனா வைரஸ் நோயாளி ஒருவர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, 154 பேர் தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

இந்நிலையில், கப்பலில் பணிபுரிந்த நிலையில் இந்தியாவில் இருந்து வருகை தந்த மாலுமி ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள் ளாக்கியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவர் கடந்த சில நட்களுக்கு முன்பு இந்தியாவிலிருந்து வருகை தந்ததையடுத்து 14 நாட்கள் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

14 நாட்களின் பின் பி.சி.ஆர். பரிசோதனைக் குட்படுத்தப்பட்ட இவர் கொரோனா தொற்று இல்லையென உறுதிப்படுத் தப்பட்டதையடுத்து இவரின் வீட்டில் மேலும் 14 நாட்கள் கட்டாய சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அந்தக் காலப்பகுதியில் இவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா இருப்பது உறுதியாகியுள்ளது. சுகாதார அமைச்சு இது சமூகபரவலில்லை என தெரிவித்துள்ளதுடன் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விசாரணைகள் முடிவில் உண்மைகள் வெளிவரும்



கொழும்பு, ஜூலை 04

விசாரணைகளின் முடிவில் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமேயின் குற்றச்சாட் டுக்கள் தொடர்பான உண்மைகள் வெளிவரும் என இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

2011 உலகக்கிண்ண இறுதி கிரிக்கெட் போட்டியில் ஆட்டநிர்ணயச் சதி இடம்பெற்றுள்ளதென முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயின் பகிரங்கமான குற்றச்சாட்டையடுத்து விளையாட்டுக் குற்றச்சாட்டுகள் தொடர்பிலான பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவு தொடர் வாக்குமூலங்களை முன்னெடுத்து வருகின்றது.

விளையாட்டுக் குற்றச்சாட்டுகள் தொடர்பிலான பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்த இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார, சுமார் 09 மணிநேரம் வாக்குமூலம் வழங்கினார்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விசாரணைகள் முடிவடைந்ததும் முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயின் குற்றச்சாட்டுகள் மீதான உண்மைகளை அனைவரும் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும் - என்றார்.


இதன்போது ஐ.சி.சி தலைவர் பதவிக்கு தங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதா? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த சங்கக்கார "இல்லை அப்பதவிக்கு அவ்வாறு அழைப்பு விடுக்கப்படுவதில்லை, அதற்கு வேறு விதமான நடைமுறைகள் உள்ளன, எனினும் தற்போது நான் ஐ.சி.சி தலைவர் பதவி குறித்து சிந்திக்கவில்லை அதனைவிட முக்கியமான வேறு ஒரு விடயம் எனக்கு உள்ளது" என தெரிவித்துள்ளார்.

# தங்கதுரை எம்.பியின் நினைவுதினம் நாளை

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் அ.தங்கதுரையின் 23 ஆவது நினைவு தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் மல்லாகத்தில் அமைந்துள்ள வலி. வடக்கு முன்னாள் பிரதேச சபை தவிசாளர் அமரர் ஸ்ரீபாஸ்கரனின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

1997 ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் குண்டுத்தாக்குதலில் தங்கதுரையுடன் அதிபர்கள், பொறியியலாளர் உட்பட மொத்தம் 6பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செய்திகள்

# சூகாவை மிரட்டும் செயற்பாட்டை இலங்கை அரசு நிறுத்தவேண்டும்

## சர்வதேச மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் வலியுறுத்து

ஜெனிவா, ஜூலை 04

சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ஜஸ்மின் சூகாவை அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடுகளை இலங்கை அரசு நிறுத்திக் கொள்ளவேண்டும் என்று, சர்வதேச மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக ஐ.நாவின் முன்னாள் மனித உரிமை ஆணையாளர்களான நவநீதம்பிள்ளை, செயிட் ராட் அல் ஹூசைன் உள்ளிட்ட 150 இற்கும் அதிகமான மனித உரிமை ஆர்வலர்கள், செயற்பாட்டாளர்கள், கல்விமான்கள் கையெழுத்திட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் இலங்கை அரசு ஜஸ்மின் சூகாவுக்கு எதிராக முன்வைத்துள்ள ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளுக்கு, கடுமையான எதிர்ப்பை வெளியிடுவதாக அவர்கள் கூறியுள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டுகளும் அச்சுறுத்தல்களும், மனித உரிமை பாதுகாவலர், சர்வதேச அளவில் நீதிக்காக குரல் கொடுப்பவர் என்ற ஜஸ்மின் சூகாவின் நீண்டகாலக் கௌரவத்துக்கு, பாதிப்பை ஏற்படுத்த முயல்பவையாகக் காணப்படுவதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை அதிகாரிகள் ஜஸ்மின் சூகாவுக்கு எதிராக முன்வைத்து வரும் குற்றச்சாட்டுகள் அவருக்கும், அவரது அமைப்புக்கும், மனித உரிமை சமூகத்துக்கும் எதிரான குற்றங்கள் மாத்திரமன்றி, அவரது பணியுடன் தொடர்புடைய பாதிக்கப்பட்டவர்கள், உயிர்தப்பியவர்களுக்கும் எதிரான குற்றங்கள் ஆகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கும் ஜஸ்மின் சூகாவின் நியாயபூர்வமான நடவடிக்கைகள் குறிப்பாக நீதி மற்றும் உண்மைக்கு ஆதரவான அவரது நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு எதிரான நேரடி பதிலடியாக அவர் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் குறித்து, ஆழ்ந்த கவலையை வெளியிடுவதாகவும், சர்வதேச மனித உரிமை செயற்பாட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஜஸ்மின் சூகாவுக்கு எதிரான இலங்கை அரசின் குற்றச்சாட்டுகள் சர்வதேசக் கொள்கைகளை மீறும் வகையிலான நடவடிக்கை என்று கூறியுள்ள அவர்கள், பொறுப்புக்கூறுதல் குறித்த தீவிர அர்ப்பணிப்பை வெளிப்படுத்துமாறும், மனித உரிமைகளுக்காகப் பாடுபடுவர்களை தாக்கும் நடவடிக்கைகளுக்கு பதிலாக மனித உரிமைகளை மதிக்குமாறும் இலங்கை அரசைக் கேட்டுக்கொள்வதாகவும் அவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.





# புலிகளின் கொடிகள் ஆவணங்கள் சிக்கின!

முல்லைத்தீவு, ஜூலை 04

முல்லைத்தீவு - மாத்தளன் பகுதியில் இராணுவத்தினர் நேற்று மேற்கொண்ட அகழ்வு நடவடிக்கை ஒன்றின்போது, விடுதலைப் புலிகளின் ஆவணங்கள் மற்றும் கொடிகள் மீட்கப் பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மாத்தளன் பகுதியில் உள்ள காணி ஒன்றுக்குள் இருந்த வீட்டினுள் ஆயுதங்கள் புதைக்கப்பட்டுள்ளதாக கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில், நேற்று முன் தினம் இராணுவத்தினர் மாத்தளன் பகுதியில் அகழ்வு நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட இந்தத் தேடுதல் நடவடிக்கையின்போது, விடுதலைப் புலிகளின் இலச்சினைகள் பதிக்கப்பட்ட துண்டுகள் மற்றும் கரும்புலிகளின் சின்னம் அச்சிடப்பட்ட துணிகள், தமிழீழ வரைபட புத்தகம், தமிழீழ வைப்பகத்தின் சிறுவர்களுக்கான தளிர் சேமிப்பு கணக்கு புத்தகம், ஒளிப்படங்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

# ஓகஸ்ட் 5 ஆம் திகதிக்குப் பின்னர் மொட்டு கருகிவிடும் என்பது உறுதி

## வேலுகுமார் கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 04

“கண்டி மாவட்டத்தில் மட்டுமல்ல நாட்டின் பல பாகங்களிலும் ஐக்கிய மக்கள் சக்திக்கான வெற்றிக்கோஷமே ஓங்கி ஒலித்துக்கொண்டிருப்பதால் ஆளுங்கட்சியின் அரசியல் முகாம் ஆட்டம் கண்டுள்ளது. எனவே, ஜனாதிபதி தேர்தலின்போது மலர்ந்த மொட்டு எதிர்வரும் ஓகஸ்ட் 5 ஆம் திகதிக்கு பின்னர் கருகிவிடும் என்பது உறுதி.” - என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட வேட்பாளருமான வேலுகுமார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான பிரசாரங்கள் சூடுபிடித்துள்ள நிலையில், கண்டி மாவட்டத்தில் வரலாற்று வெற்றியைப் பதிவு செய்யும் நோக்கில் வேட்பாளர் வேலுகுமார் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுவருகிறார்.

இதன்படி நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே நாட்டின் காவலன் என்றும் அவரே மீட்பார் என்றும் மக்கள் மத்தியில் மாயையை உருவாக்கி, இனவாதத்தையும், மதவாதத்தையும் கையிலெடுத்து - தேசப்பற்று தொடர்பில் தொண்டைக்கிழிய போலியாக கொக்கரித்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பிரசாரம் செய்துவருகின்றது. ஆனால், கடந்த 6 மாதங்களில் இவர்கள் செய்தது என்ன? கொரோனா விவகாரத்தில் சற்று காத்திரமாக செயற்பட்டிருந்தாலும் ஏனைய விடயங்களில் தோல்விகண்டுள்ளனர். அரசிடம் தூரநோக்குச் சிந்தனை கிடையாது.

குறிப்பாக சிவில் நிர்வாகத்துக்குப் பதிலாக இராணுவமயப்படுத்தப்பட்டுவருகின்றது. இந்நிலையில் மீண்டும் ஆட்சிக்குவந்தால் 19 ஆவது திருத்தச்சட்டம் இல்லாது செய்யப்படும் எனவும் அறிவிப்பு விடுக்கின்றனர். தப்பிதவறியேனும் ராஜபக்ஷ தரப்பு ஆட்சிக்குவந்தால் பாரிய நெருக்கடிகள் ஏற்படும். எனவே, நாட்டில் எதிர்காலத்தையும் ஜனநாயகத்தையும் கருத்திற்கொண்டு மக்கள் வாக்களிக்கவேண்டும்.

கண்டி மாவட்டத்தில் ஆளுங்கட்சி வேட்பாளர்கள் விருப்பு வாக்குகளுக்காக அடித்துக்கொள்கின்றனர்.10 பேரைக் கூட்டிவந்து ஆயிரம் பேர் இணைந்துவிட்டனர் என்றெல்லாம் கதைகள் கூறப்படுகின்றன. அவர்கள் விருப்பு வாக்குளுக்காக மோதிக்கொண்டாலும் மக்கள் சக்தி எம்பக்கமே. எனவே, சஜித் தலைமையில் புதிய ஆட்சி மலரும்-என்றார்.

# இலங்கை தொடர்பான அறிக்கை மீது ஜெனிவாவில் 10ஆம் திகதி விவாதம்!

ஜெனிவா, ஜூலை 04

தற்போது நடந்து வரும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 44ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான அறிக்கை எதிர்வரும் 10ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து விவாதமும் இடம்பெறவுள்ளது.

இலங்கைக்கு கடந்த வருடம் பயணம் செய்த சுதந்திரத்துக்கான உரிமை மற்றும் அமைதியாக ஒன்று கூடுவதற்கான உரிமை தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட நிபுணரின் அறிக்கையே மனித உரிமைகள் சபையில் வெளியிடப்படவுள்ளது

ஏற்கனவே விசேட நிபுணரின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ள நிலையில், முதலில் விசேட நிபுணர் அந்த அறிக்கையின் சாராம்சத்தை வெளியிடுவார். சாராம்சம் சபையில் வெளியிடப்பட்டதும் விவாதம் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விஜயகலாவுக்கு எதிரான வழக்கு; நவம்பர் 27 வரை ஒத்திவைப்பு!

கொழும்பு, ஜூன் 04

முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர், விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிரான வழக்கு, நவம்பர் மாதம் 27ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப் பட்டுள்ளது.

முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிரான வழக்கை, கொழும்பு புதுக்கடை நீதிமன்றம் நவம்பர் மாதம் 27 வரை ஒத்தி வைத்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீள உருவாகவேண்டும் என்ற கருத்து தெரிவித்ததாக, முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மீது தொடரப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

இதன்போது புதுக்கடை நீதிமன்றத்தில் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜாவுடன் ஆஜராகியிருந்தார்.

வழக்கை விசாரணை செய்த நீதவான், எதிர்வரும் நவம்பர் மாதம் 27 ஆம் திகதி வரை வழக்கை ஒத்திவைத்தார்.

# கல்வியியற் கல்லூரி மாணவருக்கு ரூ.5 ஆயிரம் கொடுப்பனவு

கொவிட் - 19 தொற்று நோய் பரவலைக் கட்டுப்படுத்த முன்னெடுக்கப்பட்ட கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் போது, தேசிய கல்வியற் கல்லூரிகளின் மாணவர்களுக்கு வீட்டிலேயே செலவழித்த காலத்துக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, கல்வி டிப்ளோமாக்களை நிறைவு செய்ய வேண்டிய முதலாம் ஆண்டு, இரண்டாம் ஆண்டு மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கு ஜூலை 15ஆம் திகதிவரை மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

கொரோனா தொற்று நோய் பரவுவதைத் தடுக்க விதிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு காரணமாக கல்லூரி மூடப்பட்ட மூன்று மாதங்களில் 16 ஆயிரத்து 200 மாணவர்களுக்குக் கொடுப்பனவு வழங்க 24 கோடி 20 இலட்சம் ரூபா செலவிடப்படவுள்ளதாக அமைச்சு வெளிப்படுத்தியது.

செய்திகள்

# சுமந்திரனைத் தோற்கடிப்பதே தமிழ்த் தேசியத்தைக் காக்கும் வழி

## மாவீரரின் தந்தையின் வேண்டுகோள்

**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மூத்தபோராளியும் மாவீரர் அறிவிழியின் தந்தையுமான பசீர் (காக்கா) என்று அறியப்பட்ட மு.மனோகர் நேற்று யாழ். ஊடக அமையத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் தெரிவித்த கருத்துக்களின் முழு வடிவம் வருமாறு:-**

தமிழ்த் தேசியத்தைத் தூக்கிலிடுவதற்கான முயற்சிகள் தீவிரமடைந்து வரும் இன்றைய சூழலில் ஒரு மாவீரரின் தந்தையான முத்துக்குமார் மனோகர் ஆகிய நான் சில விடயங்களை வெளிப்படுத்தியே ஆக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய முக்கிய கட்சிகளுடன் தமிழ்த் தேசிய பசுமை இயக்கமும் தேசியத்தை நேசிப்போரின் கவனத்தை ஈர்த்துள்ளது. இவற்றில் எந்த அணிக்கு வாக்களிப்பது என்பது அவரவர் சொந்த முடிவு. ஆனால், மாவீரர்களின் பெற்றோர்கள், எம்மை வழி நடத்திய தலைவர் பிரபாகரன் அவர்களை என்றும் நேசிக்கும் முன்னாள் போராளிகள், ஆதரவாளர்கள் அனைவரும் ஜனாதிபதி சட்டத்தரணி ஆபிரஹாம் மதியாபரணம் சுமந்திரன் அவர்களுக்கு வாக்களிப்பது எமது மாவீரர்களின் தியாகத்தைக் கணக்கிலெடுக்காத தோற்றத்தைக் கொடுத்து விடும் என்பதைப் பணிவுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எமது தேசியத் தலைவரால் அடையாளப்படுத்தப்பட்ட கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு; சரியோ பிழையோ அதற்கு வாக்களிப்பது என்பது எமது கடமை எனக் கணிசமானோர் கருதுகின்றனர் எனத் தெரிகிறது. இவ்வாறான நிலைப்பாட்டில் உள்ளவர்களுக்கு மட்டுமே இந்த வேண்டுகோளை விடுக்கிறேன். மேலே சுட்டிக் காட்டியுள்ள ஏனைய மூன்று தரப்புக்களில் ஏதோ ஒன்றுக்கு வாக்களிக்கத் தீர்மானிப்போர் விருப்பு வாக்குகளை தாம் உத்தேசிக்கும் எவருக்கும் அளிக்கலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்கத் தீர்மானிப்போர் சுமந்திரனைத் தவிர வேறு மூன்று வேட்பாளர்கள் எவருக்காவது அளிக்குமாறு அன்புரிமையுடன் வேண்டுகிறேன்.

*01.* புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த கிளிநொச்சியில் நடைபெற்ற நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் திறப்பு விழாவில் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார். தனக்கு ஓய்வு வழங்குமாறு தலைவரிடம் கோரிக்கை விடுத்தார் என்று அந்த உரையில் அவர் குறிப்பிட்டார். தனது வேண்டுகோளுக்குப் பதிலளித்த தலைவர் உங்களுக்கு ஓய்வு சாகும்போதுதான் கிடைக்கும் எனக் குறிப்பிட்டார் என்று அவர் மேலும் தெரிவித்தார். அவ்வாறான அந்தக் கட்டடத் தொகுதி தற்போது கைமாறியதும் அங்கு நடைபெற்ற வழக்கொன்றில் போராளிகளை பயங்கரவாதிகள் எனக் குறிப்பிட்டவர்




சுமந்திரன். ஒரு தரப்பினருக்காக வாதிட்ட இவர் மறுதரப்பினரை இவர்கள் பயங்கரவாதிகளுடன் தொடர்புபட்டவர்கள் எனக் குறிப்பிட்டார். போராளிகள் பற்றிய இத்தகைய கருத்தைக் கொண்ட ஒருவரை தமது வாழ்வையே அர்ப்பணித்த பாலா அண்ணாவுடன் ஒப்பிடுவது சகிக்க முடியாததாகும். இதனை பாலா அண்ணாவை அவமதிக்கும் முயற்சியாகவே கருத வேண்டியுள்ளது.

*02.* இனப்படுகொலை பற்றிய தீர்மானம் குறித்து ஏனையோர் குறிப்பிடும்போது உள்ளூர் விசாரணையே போதும் என விடாப்பிடியாக நின்றவர் சுமந்திரன். இவரை மீறிக் காரியங்கள் நடந்தபோது அரசுக்கு கால அவகாசம் வழங்கும் முயற்சிக்காகக் கடுமையாக உழைத்தவர். இனப்படுகொலை என்ற தீர்மானத்தைக் கொண்டு வருவதற்குப் போதிய சாட்சியங்கள் இல்லை எனக் கருத்துரைத்தவர் இவர். சாட்சியங்களை ஆதாரங்களை திரட்டும் பணி மக்களின் வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே உரியது. அந்தக் கடமையைச் செய்யத் தவறியதுடன் அரசை எப்படிக் காப்பாற்றுவது என்பது பற்றிய சிந்தனையுடன் செயலாற்றியவர் சுமந்திரன். இனப்படுகொலை விவகாரத்தை நீர்த்துப் போகச் செய்வதில் இவரது பங்கே மிகக்கூடுதலானது. ஜெனிவாவில் அரசுக்கு எதிராகச் செயற்பட மாட்டோம் என இவர் கூறும் காணொலி சமூகவலைத்தளங்களில் உலாவருகின்றது.

*03.* அரசியல் கைதிகள் விவகாரத்தை இவரிடமே ஒப்படைத்தது கூட்டமைப்பு. இவரது முயற்சியினால் எந்தவொரு முன்னாள் போராளியாவது விடுதலை செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. மாறாகத் தான் அரசுத் தரப்புடன் கிரிக்கெட் விளையாடியமை தனது இராஜதந்திரம் என்றும் கோட்டாபயவுடன் டின்னரில் கலந்து கொள்ளும் தான் உங்களது விடுதலையைச் சாத்தியமாக்குவேன் எனப் புழுகினார். அரசியல் கைதிகளின் குடும்பத்தினரின் வறுமையை தேர்தல் செலவுக்குப் பணமில்லாத விடயத்துடன் ஒப்பிட்டவர் இவர். உண்மையில் அரசியல் கைதிகளின் விடயத்தில் தலைகீழாகவே இவர் செயற்பட்டார். கட்டாய ஆட்சேர்ப்பு விடயத்தில் உண்மை வெளிக்கொணரப்படுவது முக்கியம். அப்படியென்றால்தான் உண்மையான நல்லிணக்கம் என்று நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார். இதேவேளை உண்மையைக் குழிதோண்டிப் புதைக்கவே ஜெனிவாவில் முயன்றார். யுத்தத்தில் நிகழ்ந்தது இனப்படுகொலையே என வடக்கு மாகாண சபை தீர்மானம் நிறைவேற்றியதைத் தொடர்ந்து, ஏற்பட்ட சதி முயற்சிகளில் - அரசியல் குழப்பங்களின் கதாநாயகன் இவரே. இது யு. எஸ். ஹோட்டலில் நடந்த விடயங்கள் தொடர்பாக விந்தன் கனகரத்தினம் வெளியிட்ட தகவல்கள் மூலம் தெரிய வருகின்றது. உண்மையில் இவர் யாருடைய தரப்பாக செயற்படுகிறார் என்பதை விளக்க இந்த உதாரணங்கள் போதும்.

*04.* உண்மையில் தமிழரின் ஆயுதப் போராட்டத்தை மட்டுமே ஏற்கவில்லை இவர். இன்றுவரை தாம் ஆயுதமேந்தியது தவறு என்று கூறாத ஜே.வி.பியினரின் வழிமுறைகளை ஏற்கிறார். தமிழரின் அடிநாதமான கோரிக்கையான வடக்கு- கிழக்கு இணைப்பைத் தகர்த்தவர்கள் சுனாமிக் கட்டமைப்பை நொருக்கியவர்கள் என்ற வரலாறு ஜே.வி.பிக்கு உண்டு. இக்கட்சியின் தலைவர் ரோஹண விஜேவீரவின் கொள்கைகளில் ஒன்று மலையக மக்கள் இந்தியாவின் கைக்கூலிகள் என்பது. இந்த வரலாற்றையெல்லாம் தெரிந்து கொண்டே அவர்களுடன் சிவப்புச் சட்டை அணிந்து கொண்டு மே தின நிகழ்வில் கலந்து கொண்டவர் இவர். மந்திரிப் பதவியைத் தவிர எந்த அரசியல் முன்னேற்றத்தையும் இவரால் காண முடியாது என்ற யதார்த்தத்தை நன்கு தெரிந்து கொண்டே இவர் மக்களை ஏமாற்ற முயல்கின்றார். வடக்கு - கிழக்கு இணைப்பு, சுனாமிக் கட்டமைப்பு விவகாரங்களில் தமிழர் தரப்புக்காக நீதிமன்றில் வாதிட முன்வராத இவர், ஜே.வி.பியின் நிலைப்பாட்டுடனேயே உள்ளார் எனக் கருதவேண்டியுள்ளது.

*05.* ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்துவிட்டது என்பது முள்ளிவாய்க்காலில் தலைவர் எடுத்த முடிவு. களத்தில் நின்ற போராளிகளுக்கும், போராட்ட மண்ணில் நின்ற பொதுமக்களுக்கும் நன்கு தெரியும். தனது துரோகத்தனத்தையும் தவறுகளையும் சுட்டிக்காட்டுவோரை ஆயுதப் போராட்டம் தொடர வேண்டும் என விரும்புபவர்களாக சித்திரிக்க முயல்கிறார் சுமந்திரன். அத்துடன் இவர்கள் மீது ஒரு கண் வைத்திருங்கள் என மறைமுகமாக சைகை காட்டுகின்றார் படைத்தரப்புக்கு. உணர்வுபூர்வமாக உயிரைக் கொடுத்து நடைபெற்ற ஆயுதப் போராட்டத்தின் - தேசியத்தின் பெயரால் கிடைத்த வாக்குகளால்தான் தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவி கிடைத்தது என்பதை நன்றிகெட்டத்தனமாக மறந்து விட்டார். யோக்கியமானவராக இருந்தால் இப்போது சொல்லும் கருத்துக்களை இவர் விசுவாசிக்கும் ரணிலின் கட்சி சார்பில் தெரிவித்து அரசியலில் இறங்கியிருக்கலாமே?

தமிழ்த் தேசிய நீக்கத்துக்காகத் துடிக்கும் இவர் தான் ஒரு இலட்சம் வாக்குகள் பெறுவேன் என்பது உணர்வுபூர்வமான இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட மாவீரர்களின் ஆன்மாவையும் பொருட்படுத்தாததைச் சுட்டிக்காட்டுகின்றது. எனவே. லெப். கேணல் கில்மன், பிரிகேடியர் தீபனின் சகோதரர், பெற்றோர் உட்பட அனைத்து மாவீரர் குடும்பத்தினரும், முன்னாள் போராளிகளும் சுமந்திரனின் இந்த சவாலை ஏற்க வேண்டும். இவரைத் தோற்கடிக்க சாத்தியமான சகலவற்றையும் செய்ய வேண்டும். மாவீரர் அறிவிழியின் அப்பாவாக நான் இந்த வேண்டுகோளை விடுக்கிறேன். விடுதலைப் புலிகளின் முதல் மாவீரர் சங்கர் உட்பட இந்தப் போராட்டத்தில் ஆகுதியாகிய வடக்கு - கிழக்கு மற்றும் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாவீரர்கள் தளபதிகளின் உணர்வுகளைப் புரிந்தவன் என்ற வகையில் மாவீரருக்குச் செய்யும் கௌரவமாக சுமந்திரனின் எதிர்பார்ப்பைத் தோற்கடிக்கும் பணியில் கைகோர்க்கும்படியாக அன்புடனும் உரிமையுடனும் வேண்டுகிறேன். எமது மாவீரர்கள் சுமந்திரன் கிளிநொச்சி நீதிமன்றில் குறிப்பிட்டது போன்று பயங்கரவாதிகள் அல்லர் என்பதைக் கூட்டாக அவருக்கு உணர்த்துவோம். இது எமது வரலாற்றுக் கடமை. துயிலுமில்லத்தில் சுடரேற்றுவதற்கு ஒப்பானது.

*மு.மனோகர்*
*(மாவீரர் அறிவிழியின் தந்தை)*

செய்திகள்





# யானைக்கு வைத்த மின் தாக்கி வவுணதீவில் இருவர் உயிரிழப்பு!

## நேற்று அதிகாலை துயரச் சம்பவம்

மட்டக்களப்பு, ஜூலை 04

மட்டக்களப்பு, வவுணதீவுப் பிரதேசத்தில் காட்டுயானைக்கு வைக்கப்பட்ட மின்சாரம் தாக்கியதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

ஆயித்தியமலை பொலிஸ் பிரிவிலுள்ள உன்னிச்சை, கரவெட்டியாறு கிராமத்தில் இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

யானைப் பாதுகாப்பு வேலியையும் தாண்டி காட்டுயானைகள் தமது பயிர்களை அழித்து வருவதால், அவற்றிடமிருந்து தமது வயலைப் பாதுகாப்பதற்காக விவசாயிகளால் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட வைன்டிங் கம்பி மின் வேலியில் சிக்கியே இவ் இருவரும் உயிரிழந்துள்ளனர்.

கரவெட்டியாறு கிராமத்தைச்சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான முனிசாமி தங்கையா என்பவரும், அவரது மைத்துனரான 7 பிள்ளைகளின் தந்தையான சீனித்தம்பி மணிவண்ணன் ஆகியோரே இவ் விபத்தில் பலியாகியுள்ளனர்.

ஆயித்தியமலை பொலிஸார், கிராம உத்தியோகத்தர், மண்முனை மேற்கு பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் சுபா. சதாகரன் ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டுள்ளதுடன் ஆயித்தியமலை பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ரம்புட்டான் விதை தொண்டையில் சிக்கி 11 மாத குழந்தை உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 04

ரம்புட்டான் விதை தொண்டையில் சிக்கியதில் 11 மாதக் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

சம்பவம் மாத்தறை கொஸ்மோதர பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ரம்புட்டான் விதை தொண்டையில் சிக்கியதையடுத்து குழந்தைக்கு மூச்சு திணறியது. உடனடியாகச் செயற்பட்ட பெற்றோர் குழந்தையை தெனியாய வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

எனினும் குழந்தை உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை தரப்பினர் தெரிவித்தனர்.

# மஹிந்தவை பிரதமராக்கும் மக்கள் சக்தி

## வஜிர குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 03

சஜித் பிரேமதாஸவின் தலைமையில் இயங்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஒரு குழுவினர், மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக்குவதற்குரிய ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடும் செயற்பாடுகளில் ஈடுபடவுள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தல் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியினர் ராஜபக்ஷவினரின் அரசியலைதான் தற்போது பின்பற்றுகின்றார்கள் எனவும் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி மக்களை ஏமாற்றும் செயற்பாடுகளையே தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றதென அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.



# மண்டைதீவுக் கடலில் நேற்று சிக்கியது 476 கிலோ கஞ்சா!

யாழ்ப்பாணம், ஜூலை 04

யாழ்ப்பாணம் மண்டைதீவுப் பகுதியில் 476 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. இதனைக் கடத்துவதற்குப் பயன்பட்டதாகக் கூறப்படும் படகின் இயந்திரம் ஒன்றுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

மண்டைதீவு கடற்கரைப் பகுதியில் படகு ஒன்று நின்றுள்ளது. அந்தப் படகைக் கடற்படையினர் சோதனையிட்டபோது அதற்குள் சந்தேகத்துக்கிடமான பொதிகள் காணப்பட்டுள்ளன.

அவற்றைக் கடற்படையினர் சோதனையிட்டபோது அதில் கஞ்சா இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

426 கிலோ எடையுள்ள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கடற்படையினரும் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் குருநகர்ப் பகுதியில் வைத்து சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். படகுக்கு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் இயந்திரம் ஒன்றும் அவரிடம் மீட்கப்பட்டுள்ளது.

# கொழும்பு துறைமுக ஊழியர்களின் பகிஷ்கரிப்பு போராட்டம் நிறுத்தம்

கொழும்பு, ஜூலை 04

கொழும்பு துறைமுக ஊழியர்களின் தொடர் பணி பகிஷ்கரிப்பு போராட்டம் இடைநிறுத்தப்பட்டது.



கடந்த புதன் கிழமை முதல் இவர்கள் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்த நிலையில் இவ்விடயம் குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடனான கலந்துரையாடலின் பின் இடைநிறுத்தப்பட்டதாக தொழிற்சங்கங்கள் அறிவித்தன.

பளு தூக்கிகளையும் கிழக்கு முனையத்தில் பொருத்தி, பணிகளை ஆரம்பிக்குமாறு ஏற்கனவே கோரப்பட்டது. எனினும் அதற்கு தீர்வு வழங்கப்படவில்லை. இந்நிலையில் கடந்த புதன்கிழமை 3 ஊழியர்கள் பளு தூக்கி யின் மீதேறி எதிர்ப்பை வெளியிட்டனர்.

இந்த விடயம் குறித்து நடைபெற்ற பேச்சும் தோல்வியடைந்தது. கடந்த அரசாங்க காலத்தில் சீனாவில் இருந்து கொண்டுவரப்பட்ட 3 பளு தூக்கிகள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தன. இந்தப் பளு தூக்கிகளை கிழக்கு முனையத்தில் பொருத்த வேண்டும் என தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன. எனினும் அதற்கு இதுவரை அனுமதி கிடைக்கவில்லை.

இந்நிலையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் பணி பகிஷ்கரிப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் உயரதிகாரிகள் சிலருக்கு இடமாற்றம்

பிரதி பொலிஸ்மா அதிபர்கள் உள்ளிட்ட பொலிஸ் உயரதிகாரிகள் சிலர் இடமாற்றப்பட்டுள்ளனர்.

சேவைத் தேவையின் அடிப்படையில் தேர்தல் ஆணைக்குழு மற்றும் பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்திற்கு பொறுப்பாகச் செயற்பட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எஸ். சி.மெதவத்த பொலிஸ் நலன்புரிப் பிரிவின் பிரதி பொலிஸ்மா அதிபராக இடமாற்றப்பட்டுள்ளார். அந்தப் பணியகத்தின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக பதில் பிரதி பொலிஸ்மா அதிபர் ஜீ.கே.ஜே அபோன்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார் என பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

மேல் மாகாண வடக்கு பகுதிக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபராக பதில் பிரதி பொலிஸ்மா அதிபர் எஸ்.பி.ரண சிங்க நியமிக்கப் பட்டுள்ளார். அரச புலனாய்வுச் சேவையின் பிரதி பொலிஸ்மா அதிபரின் பதவிக்காக பதில் பிரதி பொலிஸ்மா அதிபர் யூ.கே.மாரம்பகே நியமிக்கப் பட் டுள்ளார் எனக் கூறப் பட்டது.





யாழ்ப்பாணம் - மூளாய் ஸ்ரீ ஹரிகர புத்திர ஐயனார், ஸ்ரீகாயத்ரி அன்னை திருக்கோயில்களின் இரண்டாவது கும்பாபிஷேக தினத்தில் சங்காபிஷேகமும் பாற்குடபவனியும் நேற்று முன்தினம் இடம்பெற்றவேளை.

பாகம் – 33

தயாளன்

# கூட்டமைப்பின் உருவாக்கம் எப்படி நிகழ்ந்தது?

யாழ். பெரிய கோயிலுக்கு அண்மையில் கிறீன் பீல்ட் விளையாட்டுக்கழகம் என்று ஒரு அமைப்பு இருக்கிறது. 1981 ல் இதன் வருடாந்த விழாவை முன்னிட்டு மரதன் ஓட்டப் போட்டிக்கு ஒழுங்கு செய்திருந்தனர். இதில் முதலாவதாக பண்டத்தரிப்பைச் சேர்ந்த திருநாவுக்கரசு, இரண்டாவதாக பாஷையூரைச் சேர்ந்த றுபேர்ட் என்ற வீரரும், மூன்றாவதாக ஒரு போராளியும் வந்தனர். இரவு நிகழ்வுக்கு எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் பிரதம விருந்தினராக வந்திருந்தார். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு அவரே பரிசுகளை வழங்கினார். மூன்றாவது பரிசான ரவ்லிங் பேக் கைப் பெற்றுக்கொண்டு அந்தப் போராளி திரும்பியதும் பொட்டு சொன்னார். “நானெண்டா பரிசு வாங்க முதல் அவற்றை காலில விழுந்து கும்பிட்டிருப்பன்” இவ்வாறான நிலையில் தான் அன்றைய இளைஞர்கள் தமிழ் அரசியல் வாதிகளைப் பார்த்தார்கள். அதன் ஒரு வெளிப்பாடுதான் அவர் கையைக் கிழித்து யோகேஸ்வரனுக்கு இரத்த பொட்டு வைத்ததும்.

தமிழ் இளைஞர்களின் உணர்வுக்கு ஒரு உதாரணம் பொட்டு. காசி ஆனந்தனுக்கு பொட்டு வைத்தவர்களில் பண்டிதர் என்னும் மூத்த போராளியும் ஒருவர்.

• • •

இன்று உணர்வு பூர்வமான தலைமுறையினரை கூட்டமைப்பில் காண முடியாது . பெரும்பாலும் கூலிக்கு மாரடிக்கும் கூட்டம்தான் போஸ்டர், ஸ்டிக்கர் ஒட்டவும் சம்பளம் பேசித்தான் வேலைகள் நடைபெறுகின்றன

வரலாறு தெரியாத பலர் இன்று தமிழர் பற்றி தீர்மானிக்கும் சக்திகளாக இருக்கின்றனர். கிளிநொச்சி நீதிமன்றில் நடைபெற்ற வழக்கொன்றில் ஒரு தரப்பினருக்காக வாதாடிய சுமந்திரன் “இவர்கள் பயங்கரவாதிகளுடன் தொடர்புபட்டவர்கள்” என மறுதரப்பினரைச் சுட்டிக் காட்டி னார். இவ்வாறானவரை தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தைக் கையாள அனுமதித்திருக்கிறார் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா. இன்று தமிழர் தரப்பு விடயங்களைத் தீர்மானிக்கும் சக்தியாக போராட்டத்தின் அறுவடையை அள்ளிக்கொண்டு போன இவர் போன்றவர்கள் திகழ்கின்றனர். இவர்களுக்கு தமிழ்த் தேசியப் போராட்டத்தின் அரிச்சுவடியே தெரியாது. ஆனால் இவர்களை நியாயப்படுத்தவும் ஒரு கூட்டம் உள்ளது. விஞ்ஞான பூர்வமாக வாதிட்டார் என்று எழுதவும் ஒருவர் இருப்பார்.

மகசின் சிறையின் வாட்டுக்குச் சென்ற சுமந்திரன் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு மொத்தக் குத்தகைக்காரர் தானே என்பது போல் கதையளந்தார். தான் அரசு தரப்பினருடன் கிரிக்கட் ஆடியமை தனது ராஜதந்திரம் என தனது முதுகில் தானே தட்டிக்கொண்டார். எந்தக் கைதியும் அவரது கிரிக்கட் திறமை பற்றி கேட்காமலே தன்னிலை விளக்கமளித்தார். கோட்டாபயவுடன் தான் டின்னரில் கலந்து கொள்வதுண்டு என்றும் சொன்னார். அவர் கேட்கும் விபரங்களை கைதிகள் அனுப்பிக்கொண்டிருந்தனர். நிச்சயம் அவை அவரது வீட்டுக் குப்பைத் தொட்டிக்குள் போயிருக்கும். ஏனெனில்



இது வரை சிறைக்குள் இருந்த எவரும் இவரது முயற்சியால் வெளிவரவில்லை. ஆனால் இவரது பெயரால் சிலர் சிறைக்குள் சென்றுள்ளனர்.

**கூட்டமைப்பின் சின்னம்மா சுமந்திரன்!**

தமது மனைவி பிள்ளைகள் வறுமையில் வாடுகின்றனர் எனவும் புலம்பெயர் தமிழர்களுடன் பேசி ஏதாவது உதவி பெற்றுக்கொடுக்கும்படியும் கைதிகள் வேண்டினர். அதற்கு அவர் முன்னர் புலிகள் இருந்தனர். கேட்டவுடன் நிதியுதவி கிடைத்தது. ஆனால் இப்போது கட்சிக்கே நிதியில்லை. தேர்தலுக்குச் செலவு செய்ய கட்சியிடம் நிதி இல்லை என விளக்கமளித்தார். குடிக்கக் கூழ் இல்லாதவனுக்கும் புளிச்சல் ஏவறையுடன் நின்று பாயசம் கிடைக்கவில்லை என்பவனுக்கும் ஒரே மாதிரியான கவலைதான். எப்படியோ கூட்டமைப்பின் சின்னம்மாவாக சுமந்திரன் விளங்குகிறார். சசிகலாவுக்கு எப்படி அதிகாரம் இருந்ததோ அதே போல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாணயக் கயிற்றை எடுத்துக்கொண்டவராக அவர் காட்சியளிக்கிறார்.

வார்த்தை ஜாலத்திலும் இவர் வல்லவர்தான். “வட, கிழக்கு இணைப்பு இப்போதைக்குச் சாத்தியமில்லை ” என்கிறார் எப்பவாகினும் இது சாத்தியமாகலாம் என்ற மாதிரித்தான் இவரது கூற்று அமைந்துள்ளது. தமிழரின் தற்போதைய அரசியல் தலைமை இருக்கும் வரை இந்த இணைப்பு என்றுமே சாத்தியமாகாது என்பதுதான் உண்மை. ஆயுதப் போராட்டம் நடந்துகொண்டு இருந்த போது “தமிழீழத்தைத் தவிர ஏனைய அனைத்தையும் நாம் வழங்கத் தயார் என்று கூறின சிங்களத்தலைமைகள். புலிகளின் ஆயுதப் போராட்டமே இந்திய இலங்கை அரசுகளை தற்காலிகமாகவேனும் வட கிழக்கை இணைக்க வைத்தது. தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு மாறாக வடகிழக்கு விடயத்தைப் பற்றி முடிவெடுக்க தமிழர்கள் வாக்களிக்கவில்லை

அதேவேளை எதிர்க்கட்சித் தலைவர், குழுக்களின் பிரதித் தலைவர் பதவிகளைத்தக்க வைத்துக்கொள்ளவோ என்னவோ போர்க் குற்றச்சாட்டிலிருந்து அரசை விடுவிக்க வழிவகுக்குமுகமாக இருவருட கால அவகாசத்தை வழங்குமாறு சர்வதேசத்தைக் கோரினர் தமிழ்க் தேசியக் கூட்டமைப்பினர். அரசியல் கைதிகள் விடுதலை, நில ஆக்கிரமிப்பு, வட கிழக்கு இணைப்பு, காணி, பொலிஸ் அதிகாரம் போன்றவற்றில் அரசிடமிருந்து கால அவகாசம் பெற்றேனும் சாதித்துக்காட்ட முடியாதவர்கள் அரசைக் காப்பாற்ற மட்டும் தலை கீழாக நிற்கின்றனர்.

அன்று ஜே.ஆரைக் காப்பாற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் நேர்மையாக நடந்தது எனச் சத்தியக் கடதாசி தாக்குதல் செய்தது போல இன்று அரசுக்குப் போர்க்குற்றம் தொடர்பாக கால அவகாசம் பெற்றுக் கொடுத்துள்ளது கூட்டமைப்பு.

தமிழரின் நலனா? அரசின் நலனா ? முக்கியம் என வரும்போது இவர்களின் தெரிவு என்னவாக இருக்கும் என்பதற்கு இந்த நிலைப் பாடு ஒரு உதாரணம்.

ஆறிய கஞ்சி பழங்கஞ்சி என்பர். ஆனால் இதே பிரச்சினைகள் அடுத்து வரும் தேர்தல்களில் சூடு காட்டப்படும். அப்போது யாராவது சிலர் பிரபாகரனே எமது தலைவர் என முழக்கமிட்டு விருப்பு வாக்கில் முதலிடத்தைப் பெறுவர். எப்படியாவது கூட்டமைப்புக்கு வாக்கு விழுந்தால் போதும் எனப் புலிகளைப் பயங்கரவாதிகள் எனக் கூறுவோரும் விட்டு விடுவர்.

• • •

2001 இல் யார் யார் போட்டியிடக் கூடாது என இருவரின் பெயர்களைப் புலிகள் குறிப்பிட்டனர். 2004 தேர்தலில் கட்சிகளின் சார்பில் போட்டியிட உள்ளவர்களின் பெயர்களுடன் தமது தரப்பினரையும் புலிகள் இணைத்திருந்தனர். மக்கள் மனதில் பதிந்த தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் கூட்டமைப்பைக் களமிறக்க பிரபாகரன் தீர்மானித்தார். ஆவரங்கால் சின்னத்துரையினால் ஏற்பட்ட சிறு சலசலப்பையும் வெற்றி கொண்டார்.

இறுதி யுத்தத்தின் பின் 2010இல் இருந்து புலிகள் சார்பானோரை அரசியலுக்குள் வந்து விடாமல் தடுப்பதில் கூட்டமைப்பு வெற்றி பெற்றுள்ளது என்றே கூறவேண்டும். தமக்குள் என்ன குத்து வெட்டு இருந்தாலும் இந்த ஒரு விடயத்தில் கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் ஒரே நிலைப்பாட்டில் உள்ளன.

அதேவேளை தமிழர்கள் நிர்வாகம் செய்யத் தகுதியில்லாதவர்கள் என்பதை நிரூபித்து வருகின்றார். வடமாகாண சபையைக் குழப்ப வெளியிலிருந்து ஒரு சக்தி வரத் தேவையில்லை என உணர்த்துகின்றனர். இவர்களுக்குக் காணி, பொலிஸ் அதிகாரங்களைக் கொடுத்தால் என்னவாகும் என அமைதியை விரும்பக்கூடிய சிங்களவரையும் சிந்திக்கவைக்கின்றனர். தினசரி ராசிபலன் வெளியிடுவதுபோல மாகாண சபைக்கும், முதல்வருக்கும் எதிராக இன்று என்ன செய்தி கொடுக்கலாம் என ஒரு அட்டவணை போட்டது போல திட்டமிட்டுச் செயற்படுகின்றனர். இவ்வாறான நிலைக்கு கட்சித்தலைமையின் ஆசீர்வாதம் இருக்கின்றது என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. இதுவும் ஒரு வகையில் சிங்கள அரசின் நிலைப்பாட்டுக்கு உதவுவது போலத்தான், திடீரென்று கட்சிக்குள் தலையெடுத்தவரை இக்கோளாறுகளின் சூத்திரதாரி என்று மக்களுக்குப் புரியும்

அதே சமயம் அரசியல் கைதிகள், காணாமல் போனோர், மாவீரர், முன்னாள் போராளிகளின் குடும்பங்களின் வாக்குகளை சீசனுக்கு ஏற்றமாதிரிக் கதைகளைச் சொல்லித் தக்கவைத்துள்ளது. இறுதி நாடகம் கடந்த மாவீரர் நாள் அன்று நடைபெற்றது. பிரபாகரன் மாதிரி போஸ் கொடுக்கலாம். ஆனால் அவர் போல் ஆகமுடியாது என்ற செய்தியை எமது மக்கள் என்றாவது உணர்த்தியே தீருவர்.

அடுத்த வாரத்துடன் இக்கட்டுரைத் தொடர் நிறைவு பெறும். அதில் இலட்சக்கணக்கான மக்கள் முன்னிலையில் கிட்டு புலிகளின் தவறை ஒப்புக்கொண்ட சம்பவத்தைக் குறிப்பிடுகிறேன்.

திரு.இரா.துரைரத்தினம் அவர்களுக்கு ஐ.பி.சி தொலைக்காட்சி நிறுவனம் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவித்தது. எனவே அவரது ‘சாதனைகள்’ செய்திவழங்கும் முறையில் உள்ள நாகரிகம் முதலானவற்றில் சிலவற்றை மீண்டும் சுட்டிக் காட்டுவது பொருத்தமாக இருக்கும்.

வல்வெட்டித்துறை நகரசபைத் தேர்தலில் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டவர்களில் வல்வை ந.அனந்தராஜ் அவர்களே அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தார். அந்த வகையில் அவரே தலைவராக நியமிக்கப்பட்டார். ஏற்கெனவே டெலோவின் சார்பில் போட்டியிட்டு இச் சபையின் தலைவராகப் பணியாற்றியவர் என்ற வகையில் சிவாஜிலிங்கம் தானே தலைமைக்குத் தெரிவு செய்யப்பட வேண்டுமென எதிர்பார்த்தார். தமிழரசுக் கட்சியின் பணிமனை நிருவாகச் செயலர் குலநாயகம் போன்றோர் சிவாஜிலிங்கத்துக்கு ஆதரவாக இருந்தனர். இந்த இழுபறிகளுக்கு இடையில் சிவாஜிலிங்கம் மாகாண சபை உறுப்பினரானார். மழை விட்டும் தூவானம் போகவில்லை என்பது போல அனந்தராஜ் மீதான அதிருப்திகளைக் குலநாயகம் போன்றோர் தொடர்ந்து வெளிப்படுத்தி வந்தனர். இந்த விடயத்தில் தமது ஆளுமையையும், நேர்மையையும் நிரூபிக்கக் கட்சித்தலைவர் மாவை, செயலர் துரைராஜசிங்கம் ஆகியோர் தவறியிருந்தனர். இந்நிலையில் இவ்விடயம் பற்றி இவர் போட்ட தலைப்பு

“நாறிக்கிடக்கும் பிரபாகரன் பிறந்த வல்வெட்டித்துறை நகர சபை”

இந்தப் பிரச்னைக்குள் பிரபாகரன் பெயரை ஏன் இழுக்க வேண்டும்? இவரது அடிமனதில் அந்தப் பெயரின் மீது உள்ள வெறுப்பு - குரோதம் வெளிப்படையாகத் தெரிகின்றதல்லவா? இதைத்தான் இவர் ஊடகக்கல்வியைப் பயின்ற லேக்ஹவுஸ் நிறுவனம் இவருக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறது என்ற முடிவுக்கே வரவேண்டியுள்ளது.

(நாளையும் வரும்)

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருதி கோகிலா மகேந்திரன்



7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : காலைக்கதிரொளி
10.30 மணி : பீட் பொக்ஸ்
11.00 மணி : டொப் 10 மூவீஸ்
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)

**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : வீக் என்ட் மூவி
அஜித், மீனா மற்றும் கிரண் நடித்த வில்லன்



4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை?



**இரவு**
7.30 மணி : ஆவணப்படம்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சொல்லாடுகளம்
'இளைஞர்களின் சமகாலத் தற்கொலைகள்"



10.00 மணி : யாவரும் கேளீர்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் சந்தானம் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
சூர்யா, நயன்தாரா மற்றும் வடிவேல் நடிப்பில் ஆதவன்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN Music HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : டொப் 20
11.00 மணி : ரிவைன்ட் ராகங்கள்

**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே (நேரலை)
3.00 மணி : எங்கேயும் எப்போதும்
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : அண்பிளக் சோ
10.00 மணி : பாடும் நிலா

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - கணிதம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - விஞ்ஞானம்
7.30 மணி : தரம் 09 - தமிழ்
8.15 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) ஊடகம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) மறு ஒளிபரப்பு
2.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
3.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
4.00 மணி : தரம் 5 சுற்றாடல்
5.00 மணி : தரம் 5 கணிதம்
6.00 மணி : தரம் 6-9 ஆங்கிலம்

**இரவு**
7.00 மணி : பொது சிங்களம்
7.30 மணி : உயர்தரம் கணிதம் விஞ்ஞானப்பிரிவு

**ஓம் ரிவி**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
5.30 மணி : வீரமாகாளி அம்மன் ஆலய தேர்த்திருவிழா நேரலை



நயினாதீவு நாகபூசனி அம்மன் ஆலய தீர்த்த உற்சவம்
9.00 மணி : திருவிழா - 01
10.00 மணி : புதியதோர் தொடக்கம்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா - 02
6.00 மணி : நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய உற்சவம் நேரலை

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடலகள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : திருகோணமலை திருப்பலி

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : ஆஹாதிய்யா
10.30 மணி : பாடல்கள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : யார் இவர்?
8.00 மணி : இஸ்லாமிய உலகம்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.07.2020 அன்று வெளியிடப்பட்டது.